
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1077

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

44

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# இருவர் உள்ளம் : கலைஞர் எழுதிய காதல் காவியம்



*1963*-ஆம் ஆண்டு கலைஞரின் திரைக்கதை வசனத்தில், இயக்குநர் எல்.வி.பிரசாத் அவர்களின் இயக்கம் மற்றும் தயாரிப்பில் வெளிவந்த திரைப்படம், 'இருவர் உள்ளம்'. எல்.வி.பிரசாத் ஏற்கெனவே கலைஞரின் 'தாயில்லாப் பிள்ளை' (1961) திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

எழுத்தாளர் லட்சுமி எழுதிய 'பெண் மனம்' எனும் நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்படம், 'இருவர் உள்ளம்'. இத்திரைப் படத்தில் இடம்பெற்ற எட்டுப் பாடல்கள் மிகவும் பிரபலமானவை. இசை கே.வி.மகா தேவன், பாடல்கள் கவியரசு கண்ணதாசன்.

### திரைப்படத்தின் கதை

நீதி மாணிக்கம் (எஸ்.ரங்காராவ்) அரசு வழக்கறிஞராக இருக்கிறார். நீதி தவறாதவர்.

மிகப் பெரிய செல்வந்தர். அவரின் மனைவி நாகம்மா (சந்தியா). இவர்களுக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். மூத்த மகன் வழக்கறிஞர் ஞானசிகாமணி (எம்.ஆர்.ராதா) இவரின் மனைவி கண்ணம்மா (டி.பி.முத்துலெட்சுமி) இவர்களுக்கு ஆறு குழந்தைகள்.

இரண்டாவது மகன் செல்வம் (சிவாஜி கணேசன்) பெங்களூருவில் படித்துக்கொண்டிருக்கிறான். ஆனால், படிப்பிற்காகப் பெற்றோர் அனுப்பும் பணத்தில் ஒரே நேரத்தில் பல பெண்களைக் காதலித்துக்கொண்டு உல்லாசமாக வாழ்ந்துவருகிறான். ஒருநாள், அவளின் காதலிகளில் ஒருத்தியான வசந்தி (பத்மினி பிரியதர்சினி) அவனிடம், தான் கருவுற்றிருப்பதாகப் பொய் சொல்லி, தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும், இல்லாவிட்டால் உன் பெற்றோரிடம் சொல்லி விடுவேன் என்று செல்வத்தை மிரட்டுகிறாள்.

ஆனால் செல்வமோ, 'சொல்லிக்கொள்' என்று சொல்லி அவளை விரட்டிவிடுகிறான். வசந்தி, தனது புகைப்படத்துடன் செல்வத்தின் அப்பா நீதிமாணிக்கத்திற்கு, தான் செல்வத்தால் கைவிடப்பட்ட கர்ப்பவதி என்று கடிதம் எழுதிவிடுகிறாள். அக்கடிதத்தைக் கண்டு கொதிப்படையும் நீதிமாணிக்கம், தன் மனைவியின் அண்ணன் ராஜநாயகத்தை (ஆர்.பாலசுப்ரமணியம்) அழைத்து, 'செல்வத்தின் படிப்பை நிறுத்தி அழைத்து வாருங்கள்' என்று சொல்லி அனுப்புகிறார்.

ராஜநாயகம் பெங்களூரு வந்து, வசந்தியைச் சரிக்கட்டி, செல்வத்தின் படிப்பை நிறுத்திவிட்டு, அவனையும் அழைத்துக்கொண்டு, ஊர் திரும்புகிறார். அத்துடன் தனது நிறுவனத்திலேயே செல்வத்திற்கு வேலையும் போட்டுக்கொடுக்கிறார். ஆனால், செல்வம், மீண்டும் தன் நண்பன் மைனர் மாணிக்கத்துடன் (பாலாஜி) சேர்ந்து கிளப், பெண்கள் சகவாசம் என்று ஊர் சுற்று கிறான். அவ்வாறு ஒரு நாள் ஒரு பெண்ணைத் தனது காரில் ஏற்றிக்கொண்டு ஊர் சுற்றும்போது, பள்ளி ஆசிரியை சாந்தா (சரோஜாதேவி) மீது காரை இடித்துவிடுகிறான். கீழே விழுந்த சாந்தா எழுந்து, 'ஒழுங்காக காரை ஓட்டும்படி,' எச்சரித்துவிட்டு செல்கிறாள்.

செல்வம் சாந்தாவிடம் மனதைப் பறி கொடுத்துவிடுகிறான். அன்றிலிருந்து சாந்தாவைப் பின்தொடர்ந்து, அவளுடன் பேச முற்படுகிறான். சாந்தாவோ செல்வத்தைப் பெண்பித்தன் என்று வெறுக்கிறாள். நீதிமாணிக்கத்தின் மூன்றாவது குழந்தையான பத்மாவுக்கு கணிதப் பாடத்திற்கு டியூசன் சொல்லிக்கொடுக்க சாந்தா, நீதிமாணிக்கத்தின் வீட்டிற்கு வருகிறாள். பத்மாவின் அண்ணன்தான் செல்வம் என்பதை அறிந்து அதிர்ச்சி அடைகிறாள்.

செல்வம் சாந்தாவை வீழ்த்தப் பல விதங்களில் முயற்சி செய்கிறான். ஒருநாள், வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் சினிமாவுக்குப் போன நேரம் பார்த்து சாந்தாவை வீட்டிற்கு வரவழைத்து, தன்னைக் காதலிக்கும்படி வற்புறுத்துகிறான். சாந்தா மறுத்து, தான் பணத்திற்கு மயங்கும் பெண்ணல்ல என்கிறாள். அதற்கு செல்வம், 'உன்னை இந்த வீட்டின் மருமகளாக்கியே தீருவேன்' என்று சவால் விடுகிறான். யாருமற்ற இரவு நேரத்தில் அரசு வழக்கறிஞரின் வீட்டிற்கு சாந்தா சென்றுவந்த விசயம் ஊர் முழுதும் பரவி, சாந்தாவை பலரும் இழிவாகப் பேசுகின்றனர். ஆசிரியர்



படங்கள் உதவி : ஞானம்

பணியும் போய்விடுகிறது.

செல்வம் செய்த இச்செயலால் சாந்தாவின் வாழ்க்கை பாதிக்கப்பட்டதை அவளின் தந்தை வக்கீல் குமாஸ்தா குருசாமி (எஸ்.ராமாராவ்) நீதிமாணிக்கத்திடம் வந்து முறையிடுகிறார். தனது மகனின் செயலுக்கு வருந்தும் நீதி மாணிக்கம், மகனை அழைத்துக் கண்டிக்கிறார். செல்வம் சாந்தாவை விரும்புவதாகவும் அவளையே திருமணம் செய்துகொள்வதாகவும் சொல்கிறான்.

நீதிமாணிக்கமும் நாகம்மாவும் சம்மதம் தெரிவித்து, வக்கீல் குமாஸ்தா குருசாமியிடம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்கின்றனர். இதைக் கேள்விப்படும் சாந்தா, இத்திருமணம் வேண்டாம் என்று மறுக்கிறாள். 'நீ திருமணத்திற்குச் சம்மதிக்காவிட்டால், தான் தற்கொலை செய்துகொள்வேன்' என்று குருசாமி மிரட்டி சாந்தாவுக்கும் செல்வத்திற்கும் திருமணம் செய்து வைக்கின்றார்.

> **அரசு வழக்கறிஞரான நீதிமாணிக்கம், தன் மகன் செல்வத்திற்கு எதிராக வாதிடுகிறார். செல்வத்தின் அண்ணன் ஞானசிகாமணி செல்வம் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப் போராடுகிறார்.**

திருமணமான இரவு, சாந்தா செல்வத்தின் மீது தனது வெறுப்பையும் அவநம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறாள். செல்வம், தான் திருந்திவிட்டதாகவும் பெண்பித்துப் பிடித்த பழைய செல்வம் அல்ல என்றும் கூறுகிறான். ஆனால், சாந்தா நம்ப மறுக்கிறாள். 'நீயாக மனம் மாறி என்னை ஏற்றுக்கொள்வது வரை நாமிருவரும் ஊருக்கு மட்டுமே கணவன் மனைவி' என்று சொல்லிவிட்டு செல்வம் ஒதுங்கிப் போகிறான்.

ஆண்டுகள் கடக்கின்றன. உண்மை தெரியாமல் தன் மகனுக்குக் குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காக நாகம்மா பூஜைகள் எல்லாம் செய்விக்கிறார். இதே நேரத்தில், செல்வத்தின் முன்னாள் காதலியான பணத்தாசை பிடித்த வசந்தி தன் கணவன் ஸ்ரீபரமாத்மா (டி.ஆர்.ராமச்சந்திரன்)வுடன் பெங்களூருவில் இருந்து சென்னைக்கு வருகிறாள். இரயில் வண்டியில் மைனர் மாணிக்கத்தைச் சந்தித்து நட்புகொண்டு அவனது வீட்டில் வந்து தங்குகின்றனர்.

### எதிர்பாராத திருப்பம்

குழந்தை வரம் வேண்டி கன்னியாகுமரி கோயிலுக்கு செல்வத்தையும் சாந்தாவையும் நாகம்மா அனுப்பி வைக்கிறார். சாந்தா மனம் மாறி செல்வத்துடன் மகிழ்ச்சியாகப் பேசுகிறாள். ஆனால், யதேச்சையாக கன்னியாகுமரிக்கு வரும் வசந்தி சாந்தாவைச் சந்தித்து, செல்வம்தான் தன்னை கன்னியாகுமரிக்கு வரச் சொன்னதாகப் பொய் சொல்லி, சாந்தா மனதில் மீண்டும் வெறுப்பை ஏற்படுத்துகிறாள். அதனால், சாந்தா செல்வத்துடன் சண்டை போடுகிறாள்.

ஊர் திரும்பும் சாந்தா காய்ச்சல் வந்து படுக்கையில் விழுகிறாள். செல்வம் கண் விழித்துப் பராமரிக்கிறான். அப்போது அவனது வீட்டிற்கு வரும் வசந்தி, மீண்டும் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி செல்வத்திடம் கேட்கிறாள். ஆனால், செல்வம், 'சாந்தா மட்டுமே தன் மனைவி, இனி வேறு யாருக்கும் தன் மனதில் இடமில்லை' என்று சொல்லி அவளை விரட்டுகிறான். வசந்தி 'ஆயிரம் ரூபாய் தந்தால் போய்விடுகிறேன்' என்கிறாள். 'பணம் தர முடியாது போய்விடு' என்கிறான். இவற்றை எல்லாம் மறைவில் இருந்து பார்க்கும் சாந்தா, செல்வம் திருந்திவிட்டான் என்பதைப் புரிந்துகொள்கிறாள்.

ஆனால், தன் மகனின் அறையில் இருந்து வசந்தி வெளியேறிச் செல்வதைப் பார்க்கும் நீதிமாணிக்கம், செல்வம் இன்னும் திருந்தவில்லை என்று கோபம் கொண்டு செல்வத்தின் கன்னத்தில் அறைகிறார். இதைப் பார்க்கும் சாந்தாவுக்கு செல்வத்தின் மீது அன்பும் பரிவும் ஏற்படுகிறது. இதற்கிடையே, வசந்தியும் மைனர் மாணிக்கமும் தவறான உறவில் ஈடுபடுவதை அறிந்து ஸ்ரீ பரமாத்மா கோபம் கொண்டு வசந்தியைக் கொலை செய்வதுடன், கொலைப் பழியை செல்வத்தின்மீது திருப்பிவிடுகிறான்.

செல்வம் சாந்தாவுடன் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, காவலர்கள் வந்து வசந்தியைக் கொலை செய்த குற்றத்திற்காக செல்வத்தைக் கைது செய்து அழைத்துச் செல்கின்றனர். நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகிறது. அரசு வழக்கறிஞரான நீதிமாணிக்கம், தன் மகன் செல்வத்திற்கு எதிராக வாதிடுகிறார். செல்வத்தின் அண்ணன் ஞானசிகாமணி செல்வம் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப் போராடுகிறார். இறுதியில், ஸ்ரீ பரமாத்மாதான் வசந்தியைக் கொலை செய்தான் என்பதைக் கண்டுபிடித்து நிரூபிப்பதால், செல்வம் விடுதலை செய்யப்படுகிறான். நீதிமாணிக்கம் தன் மகனை நல்லவன் என்று ஏற்றுக்கொள்கிறார். சாந்தாவுடன் செல்வம் மீண்டும் ஒன்றுசேர, குடும்பத்தினர் அனைவரும் மகிழ்கின்றனர். அத்துடன் படம் நிறைவடைகிறது. இதுவே 'இருவர் உள்ளம்' திரைப்படத்தின் கதை..

...காட்சி விரியும்



## புத்தகக் காட்சியில் மாணவர்களுக்குப் போட்டிகள்!

சென்னை புத்தகக் காட்சி 2026-ஐ ஒட்டி 03.01.2026 அன்று வாசிப்பு விழிப்புணர்வு நடைப்பயணமும், 09.01.2026 அன்று பள்ளி மாணவர்களுக்கான ஓவியப்போட்டியும், 10.01.2026 அன்று 'சுற்றுச் சூழல்', 'நான் வாசித்த புத்தகம்', 'நானும் செயற்கை நுண்ணறிவும்' ஆகிய தலைப்புகளில் பேச்சுப் போட்டியும் நடைபெற்றன. அடுத்தடுத்த நாட்களிலும் பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கான பல்வேறு விதமான போட்டிகளுக்கு தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

குறிப்பாக, 12.01.2026 அன்று பெரிய அரங்கத்தில் 'சென்னை வாசிக்கிறது' என்ற நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. 13.01.2026 அன்று 'நான் விரும்பும் தலைப்பு' என்ற தலைப்பில் பெரிய அரங்கத்தில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெறுகிறது. சஞ்சு மகளிர் நல சங்கத்துடன் இணைந்து நடத்தும் பொங்கல் விழா திறந்தவெளியில் நடைபெறுகிறது. 18.01.2026 அன்று பள்ளி மாணவர்களுக்கான கதை எழுதுதல், கதை சொல்லுதல், தமிழ் வார்த்தை விளையாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் சிற்றரங்கத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப்போட்டிகளில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் ஆர்.சங்கர் - 94442 18666, சுவாமிநாதன் - 94447 73136 ஆகியோரைத் தொடர்புகொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்



'கோல்டன்' பஷீர்



### நாற்பது ஆண்டுக்கால பெருமிதம்!

1986-ஆம் ஆண்டு, ஜூன் 12-ஆம் தேதி கோபாலபுரம் இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம், என் வாழ்நாளில் மறக்க முடியாத நீங்காத நினைவுச்சின்னம். அப்போது, கழகத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவராக பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கிடைத்த அரிய வாய்ப்பு!.

– 'கோல்டன்' பஷீர்,
அமைப்பாளர்,
கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, வந்தவாசி நகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சர் ஏ.டி.பன்னீர்செல்வம் மறைவு!

1940-ஆம் ஆண்டு இந்திய அமைச்சரின் ஆலோசகராக சர் ஏ.டி.பன்னீர்செல்வத்தை நியமித்தது பிரிட்டிஷ் அரசு. 'திராவிட சமுதாயத்தை தலைநிமிர்ந்து நிற்கச்செய்யும் மிகப் பெரிய அங்கீகாரம் இது' எனப் பாராட்டினார் பெரியார். அவ்வாண்டு மார்ச் 1-ஆம் தேதி, கராச்சியில் இருந்து பன்னீர்செல்வம் புறப்பட்ட தனி விமானம், ஓமன் கடலில் விழுந்து மூழ்கியது. மூன்று நாட்கள் தேடியும் விமானம் கிடைக்கவில்லை. பன்னீர்செல்வம் உட்பட அனைவரும் உயிரிழந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131